**கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2020**

---

கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல்00081ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவு பிண்ணினைப்பு – 01 ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சானது நிறைவேற்றல் முகவராக காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் முறைமை முன்னேற்றங்களுடன் வருமானம் குறைந்த சமூகங்களின் வீடமைப்பு நிலைமைகளை உயர்த்துதல், இயலுமான வகையில் வீடமைப்பு மற்றும் காணியினை மீள் அபிவிருத்தி செய்தல் போன்றவற்றில் முதலீடுவதனூடாக கொழும்பில் காணிப் பயன்பாட்டின் வினைத்திறனை உயர்த்துதல் போன்ற செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50,460 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 287 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 35,163.7 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொ 200 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (AIIB) நிதியளிக்க இணங்கப்பட்டதுடன் அதில் அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட இணங்கப்பட்டதுடன் அதில் ரூபா 14,417.2 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 82 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இணங்கப்பட்டதுடன் அதில் ரூபா 879.1 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 5 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினாலும் (GOSL) தனியார் பங்காளரால் நிதியளிக்கப்பட்ட இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 யூலை 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத்தினைத் தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | | |
| (அ) | **2019** மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (AIIB) நேரடியாக வசூலிக்கும் ரூபா 7.6 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர்கள் 41,059 கடன் வட்டியானது, தனித்தனியாக வட்டிக் கட்டணங்களாகக் காண்பிக்கப்படாது கடப்பாடு கட்டணத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | 7.6 | இத் தவறு 2021 இற்கு தொடர்புடைய கணக்குகளில் சரி செய்யப்படும். | கடப்பாடுக் கட்டணங்கள் மற்றும் வட்டி ஆகியவை நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாகக் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (AIIB) நேரடியாக அறவிடப்படுகின்ற ரூபா 35.4 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 196,863 ஆன கடப்பாடு கட்டணம் மற்றும் ரூபா 1.1 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 6,248 ஆன வட்டி நிதிக் கூற்றுகளுக்கு முன்னைய ஆண்டின் சீராக்கலாக அன்று நடைமுறை ஆண்டின் கொடுக்கல் வாங்கல்களாக கொண்டு வரப்பட்டிருந்தது. | 36.5 | இத் தவறு 2021 இற்கு தொடர்புடைய கணக்குகளில் சரி செய்யப்படும். | செலவினங்கள் அந்தந்த ஆண்டுகளுக்குரியவை வயாக அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (இ) | கடன், வட்டி மற்றும் கடப்பாடு கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கான தவறான | 82.8 | இத் தவறு 2021 இற்கு தொடர்புடைய கணக்குகளில் சரி செய்யப்படும். | கடன் வழங்கலின் உள்ளவாரான நிலை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்கீட்டு நடத்துதல் காரணமாக கடனிலிருந்து பெறப்படும் வருமானத்தின் மீதி நிதிக் கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | | வேண்டும். |
| (ஈ) | LKAS 21 பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 16.3 மில்லியன் ஆன பரிவர்த்தனை நட்டம் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 16.3 | இத் தவறு 2021 இற்கு தொடர்புடைய கணக்குகளில் சரி செய்யப்படும். | LKAS 21 பிரகாரம் பரிவர்த்தனை நட்டம்/இலாபம் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் அட்டவனை II, 3 (அ) மற்றும் (ஆ) | செயற்திட்டத்தின் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களுக்கு குறைந்த காலத்தில் ஆலோசகர்கள் நியமிப்பதற்கு வேண்டியிருப்பினும், அத் தேவைப்பாட்டிற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதில் அது தோல்வியடைந்திருந்தது. | இதற்காக ஆலோசனை சேவைகள் பெற்றுக் கொள்வதற்கு விடய துறை அடையாளப்படுத்தப்படல் மற்றும் துறை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி பணிகள் நிறைவேற்றப்படுவதற்காக செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இந்த பணி மேற்கொள்ளல் தேவைப்படுகின்றது. |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 03 திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றிக்கையின் பிரகாரம் 2021 யூன் மாதம் இறுதி வரை உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பதவிகள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படுவதற்காக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 ஏப்ரல் 25 திகதிய கடன் உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 4.09 ஆம் பிரிவு | கடன் பெறுநர் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக (UDA) நிதி முகாமைத்துவ அமைப்பொன்று பராமரிக்கப்படல் வேண்டும் அல்லது பராமரித்துச் செல்லப்படுவதற்கு காரணமாகக் காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவ்வாறான முறையொன்று அடையாளப்படுத்தப்படவில்லை. | நிதி முகாமைத்துவ அமைப்பொன்று ஸ்தாபிக்கும் அடிப்படை நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் - 19 நிலை காரணத்தினால் அது தாமதமாகியது. 2021 யூலை நிறைவடையும் முன்னர் அனைத்து நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்படுவதற்கு விரைவுப்படுத்தப்பட்டு வருகின்றது. | நிதி முகாமைத்துவ முறையொன்று முடிந்த வரையில் விரைவாக செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | கடன் உடன்படிக்கைளின் அட்டவணை 2, 1 (அ) (2) ஆம் பிரிவு | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்குள் சர்வ பிரதிநிதி செயற்பாட்டு குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான குழுவொன்று ஸ்தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையின் முதல் கட்டத்தில் 2 ஆம் அட்டவணையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் இரு கட்டுப்பாட்டு குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | செயற்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு குழு நடாத்தப்படல் வேண்டும். |
| (உ) | கடன் உடன்படிக்கையின் 02 ஆம் அட்டவனை (சுற்றாடல் மற்றும் சமூக தேவைப்பாடு) | செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ திட்ட கட்டமைப்பு மற்றும் மறுகுடியேற்ற கொள்கை கட்டமைப்பு செயற்திட்டத்தினால் தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான கொள்கை செயற்திட்டத்தின் ஊடாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒபசேகரபுர மாதம்பிடிய ஆன இரு காணிகளுக்கான மீள்குடியேற்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அக் கொள்கை கட்டமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டததின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | நடவடிக்கை | ஆரம்பிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த திகதி | நடைமுறைப்படுத்தப் பட்ட / நிறைவு செய்த திகதி | தாமதம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | மாதம்பிடிய செயற்திட்டத்தின் 700 வீட்டு அலகுகள் நிர்மாணித்தலுக்காக ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்தல் | தெரிவு செய்தல் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும். | மாதம்பிடிய செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 07 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. | 3 மாதங்கள் | இந்த தாமதம் கொவிட் 19 இனாலாகும். | திட்டத்தின் பிரகாரம் குறித்த வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாதம்பிடிய மற்றும் பர்கியுசன் செயற்திட்டத்திற்காக ஆலோசனை சேவை பெற்றுக் கொண்டமை | தெரிவு செய்தல் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும். | மாதம்பிடிய மற்றும் பர்கயுசின் செயற்திட்டங்களுக்காக ஆலோசகர்கள் முறையாக 2021 மே 20 மற்றும் மார்ச் 16 ஆம் திகதிகளில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | முறையாக 5 மற்றும் 2.5 மாதங்கள் | இந்த தாமதம் கொவிட் 19 இனாலாகும். | திட்டத்தின் பிரகாரம் குறித்த வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்வதற்கு மற்றும் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் ஆலோசனை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ஸ்டேடியுமகம, ஒபேசேகரபுர மற்றும் எபல்வத்த செயற்திட்டங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்பட்டு 2021 ஏப்ரல் 06 ஆம் திகதி அணிதிரட்டல் முற்பணமாக ரூபா 984 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 யூன் 15 ஆம் திகதியளவில் ஸ்டேடியுமகம மற்றும் ஒபேசேகரபுர செயற்திட்டங்களினால் சுற்றாடல் ஆலோசனை குழு அறிக்கை நிறைவு செய்யப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சுற்றாடல் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொவிட் - 19 சுற்றாடல் தாக்கத்தின் காரணத்தினால் அங்கீகாரம் தாமதமாகியுள்ளது. | அபாயத்தினை குறைத்துக் கொள்வதற்காக, செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் தொடர்புடைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் தொழிநுட்ப பிரிவினால் முன்வைக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி | 2021 மார்ச் 16 ஆம் திகதி நிபுணத்துவ சேவைக்கான | செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிபுணத்துவ சேவைகள் பெறப்படல் |

| | | |
|---|---|---|
| எபல்வத்த செயற்திட்டத்தின் 700 வீட்டு அலகுகள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 சனவரி 26 ஆம் திகதி அணிதிரட்டல் முற்பணமாக ரூபா 155.6 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 சனவரி 26 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, அடிப்படை முக்கியமான வேலைகள் ஆலோசகர்களின் மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த கட்டிட கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்களினால் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | வேண்டும். |
| (ஈ) நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட 1000 வீடுகளுடனான விளையாட்டரங்க கிராம வீட்டு செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பமொன்றின் பிரகாரம் ரூபா 595 மில்லியனான அணிதிரட்டல் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை ரூபாவில் ரூபா 357 மில்லியன் செலுத்துமிடையில் ரூபா 250 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது அமெரிக்கா டொலர் (US$) ஒன்றிற்கு ரூபா 238 மில்லியன் செலுத்துவதற்கு பதிலாக ரூபா 176.00 வீதத்திலாகும். அதன் விளைவாக கூட்டுத்தொகை ரூபா 12.4 மில்லியன் கூடுதலாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நாட்டினுள் அனைத்து கொடுப்பனவுகளும் ரூபாவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 மேலதிக செயற்பாடுகள்/செயற்திட்டததின் நோக்கங்களுக்கு வெளியே செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) செலவினங்களுக்கு மேலதிகமாக கலந்துக் கொண்ட பிரதிநிதி தரப்பினருக்காக செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 9.3 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் கடன் கலந்துரையாடலுக்காக 15 உத்தியோகத்தர்கள் மற்றும் அச் செலவினம் இலங்கை அரசயின் (GOSL) நிதியேற்பாட்டின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | இந்த பங்கேற்றலினூடாக அவர்கள் உடன்படிக்கையின் நிபந்தனைகளை கலந்துரையாடினதுடன் இலங்கை அரசிற்காக விளைத்திறனாக செயற்பட்டனர் | வினைத்திறனற்ற செலவினம் ஏற்கப்படாது செயற்திட்டத்தின் செலவினத்தினை முடிந்த வரையில் குறைத்துக் கொள்ளல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது வினைத்திறனாக செயற்படுத்தப்படுவதற்கென்றால் செயற்திட்டத்தில் முழு நேர பதவியணி காணப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட 66 பதவியணியில் செயற்திட்ட பணிப்பாளரினை தவிர நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) 7 உத்தியோகத்தர்கள் கடமை நிறைவேற்றல் அடிப்படையில் உயர் முகாமைத்துவமாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) செயற்திட்டத்தின் வினைத்திறன் செயன்முறைக்காக முறையான தனிநபர் முகாமைத்துவ முறைமையொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 66 ஊழியர்களில் 53 ஊழிய பதவிகள் 2020 திசெம்பர் 31 இற்கு வெற்றிடமாக காணப்பட்டது.

### 3.5 காணி தொடர்பான விடயங்கள்

| காணி துண்டுகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| கையகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டவை | 31 திசெம்பர் 2020 இற்கு கையகப்படுத்தியவை | உரித்துரிமை மாற்றப்பட்டவை | | |
| 111.5 ஹேக்கரிலான பதினொரு காணித் துண்டுகள் மீள் அபிவிருத்திக்கு முன்மொழியப்பட்டுள்ளது. | ஒட்டுமொத்த செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 11 காணித் துண்டுகளில் 37.5 ஹேக்கர் அளவிலான 04 காணித் துண்டுகள் 2020 ஆம் ஆண்டினுள் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 மே வரையில் நிறைவு செய்யப்படாதிருந்தது. | காணிகள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர், முன்மொழியப்பட்ட மீள்குடியேற்ற வீட்டு உரிமையாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேவையான திட்டங்கள் 2020 இல் நிறைவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இது 2021 யூன் 10 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பீபீபீ (PPP) மாதிரியின் கீழ் காணி அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மீள்குடியேற்றல் வெற்று காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மட்டுமல்லாது, வெற்றிடமாகவுள்ள அரச காணிகளின் பயன்பாட்டின் வினைத்திறனை உயர்த்துவதற்காக காணி அபிவிருத்து செய்வதற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) இற்கு முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. | அமுலாக்கல் திட்டங்களுக்கு அமைவாக காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். |